**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி**

**O.S. No.12/2020**

2025 –ம் ஆண்டு நவம்பர் மாதம் 01 –ம் நாள் பிரதிவாதி தரப்பு சாட்சியின் பி.சா.1 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு. R. சீனிவாசன், Bench Clerk (Gr–III) அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**நாள் : 01.11.2025**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.சந்திரமோகன் (DW–1 ) | வயது | : | 49/2025 |
| த/க பெயர் | : | திரு. பன்னீர்செல்வம் | தொழில் | : | ஒப்பந்ததாரர் |
| முகவரி | | ஆலாத்தூர் | வட்டம் | : | மன்னார்குடி |

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) நான் இந்திய கம்யுனிஸ்ட் கட்சியில் மாநில் அளவில் பொறுப்பில் உள்ளேன் என்றால் சரியல்ல, ஒன்றிய அளவில் பொறுப்பில் உள்ளேன். வாதி எனது கிராமத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். அவர் வேறு கட்சியை சேர்ந்தவர் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியான எனது மனைவி கடந்த முறை ஊராட்சி ஒன்றிய தலைவராக செயல்பட்டார் என்றால் சரிதான். அவரது பணி காலம் தற்போது முடிந்துவிட்டது என்றால் சரிதான். ஊராட்சி மன்ற தலைவர் தேர்தலின்போது எனது மனைவியை எதிர்த்து வாதியின் சகோதரர் அழகேசன் மனைவி போட்டியிட்டார் என்றால் சரியல்ல.

2) என்ன சர்வே எண்ணிற்காக வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சர்வே எண்.170 விஸ்தீரணம் 1 ½ ஏக்கர் ஆகும். அது நீர்நிலை வகைபாடு சார்ந்தது என்றால் சரிதான். தாவா சொத்தானது நீர்நிலை வகைபாட்டை சார்ந்தது என்பதற்கான எந்தவித ஆவணத்தையும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தானது ஊராட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட சொத்து என்பது எனது கட்சி என்றால் சரிதான்.

3) ஊராட்சிக்கு சொந்தமான சொத்துக்களை பராமரிப்பதற்கான பதிவேடுகள் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தானது நீர்நிலை வகைபாட்டை சார்ந்தது என்பதற்கான ஊராட்சி மன்ற அலுவலகத்தில் எந்தவித ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

4) நான் இந்த வழக்கில் தனிப்பட்ட முறையில் எந்தவித கட்சியும் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தானது ஊராட்சிக்கு சொந்தமான சொத்து என்பதால் கையகப்படுத்துவதற்கு எந்தவித அறிவிப்பும் வாதிக்கு கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எந்த தேதியில் அறிவிப்பு கொடுக்கப்பட்டது என்பதற்கான எந்த ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

5) வாதி இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை நான் பார்த்தேனா என்றால் பார்த்தேன், ஆனால் அது பொய்யான ஆவணம். வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் அனைத்தும் வாதியானவர் அரசு அலுவலர்களான வட்டாட்சியர், கோட்டாட்சியர், மாவட்ட ஆட்சியர் அனுப்பிய மனுக்கள் என்றால் சரிதான்.

6) தாவா சொத்திலிருந்து வாதியை சட்ட விரோதமாக வெளியேற்ற கூடாது என வாதியானவர் 1ம் பிரதிவாதிக்கு தனது வழக்கறிஞர் மூலம் சட்ட அறிவிப்பு வா.சா.ஆ.6 கொடுத்தார் என்றால் சரிதான். இந்த அறிவிப்புக்கு பின்னர் இந்நீதிமன்றத்தில் முன்னெச்சரிக்கை மனு பிரதிவாதிகளுக்கு எதிராக வாதி தாக்கல் செய்தார் என்றால் சரிதான்.

7) வாதி இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பு வாதியானவர் என்மீதும் எனது மனைவியின் மீதும் புகார் கொடுத்து அதன் பேரில் திருத்துறைப்பூண்டி துணைக்காவல் கண்காணிப்பாளர் எனக்கும் எனது மனைவிக்கும் விசாரணைக்காக அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரியல்ல.

8) வாதியானவர் தாவா சொத்தை ஆக்கிரமித்துள்ளதால் மீட்டு தர வேண்டும் என நான் வாதி மீது புகார் கொடுத்தேனா என்றால் ஆமாம், விக்ரபாண்டியம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். அந்த புகார் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்த பின்னர் கொடுத்தேனா என்றால் இல்லை, அதற்கு முன்பே கொடுக்கப்பட்டது. கோட்டாட்சியர் பிறப்பித்த

உத்தரவின் நகல் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

9) கோட்டாட்சியர் பிறப்பித்த உத்தரவில் மோகன் அனுபவத்தில் உள்ள சொத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் ஆமாம். கோட்டாட்சியர் உத்தரவிற்கு பின்னர் ஊராட்சி நர்வாகம் வாதியின் அனுபவத்தில் உள்ள சொத்தினை மீட்பதற்கான நடவடிக்கை ஏதேனும் எடுக்கப்பட்டதா என்றால் எடுக்கப்பட்டது, தாவா சொத்து வாதி மோகன் அனுபவத்தில் இருந்து ஊராட்சியின் அனுபவத்தில் இருந்து வருகிறது.

**வாதியின் கற்றறிந்த வழக்கறிஞர் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய கால அவகாசம் வேண்டுமென கேட்டுக்கொண்டதன் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.**

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
DN: cn=NATARAJAN AZHAGESAN, ou=THANJAVUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.11.01 18:15:01 +0530

District Munsif
Mannargudi.